RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 132 | மே.20 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# “விளையாட்டுத் துறையில் பரிந்துரைகளுக்கு இடமில்லை... தகுதிக்கே முன்னுரிமை” : அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

சென்னை: மே.20-

“தமிழகத்தில் உள்ள திறமையான விளையாட்டு வீரர்களை எவ்வித பரிந்துரையுமின்றி, முற்றிலும் தகுதியின் அடிப்படையில் கண்டறிவதற்காக புதிய 'திறன் ஆய்வு பிரிவு' (Talent Research Wing) அமைக்கப்படவுள்ளது” என்று விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தலைமையில் இன்று நேரு உள்விளையாட்டரங்கில் விளையாட்டுத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வு கூட்டத்துக்குப் பின் அவர் கூறியது: “முதல்வர் விஜய் தமிழகத்தின் எதிர்கால தேவைகளை கருத்தில் கொண்டு பல்வேறு தொலைநோக்கு திட்டங்களை தீட்டி வருகிறார். அந்த வகையில் விளையாட்டுத் துறையில் எதிர்வரும் காலங்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைகள் குறித்தும், அவற்றை செயல்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் குறித்தும் தொடர்புடைய விளையாட்டுத் துறை அரசு உயர் அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தப்பட்டது.



குறிப்பாக, 202627 ஆண்டில் விளையாட்டுத் துறையால் மேற்கொள்ளப்படவுள்ள உட்கட்டமைப்பு பணிகள், அரசுத் துறை ஒதுக்கீட்டில் விளையாட்டுத் வீரர்களுக்கான 3 சதவீத பணி வாய்ப்புகள் வழங்குவது குறித்தும், தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வென்ற வீரர்களை மென்மேலும் ஊக்குவிக்கும் வகையில் உயரிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டம், விளையாட்டு விடுதிகளில் மேற்கொள்ள வேண்டிய மேம்பாடுகள் குறித்தும், விளையாட்டு வீரர்களுக்கான நிதி உதவி திட்டங்கள் குறித்தும் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை தேவைகளான காலணிகள் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்கள் கிடைக்க செய்வதை உறுதிசெய்திடவும், விளையாட்டுத் துறையில் வீரர், வீராங்கனைகள் சாதனை படைக்க பொருளாதாரம் இனி ஒரு தடையாக இருக்கக் கூடாது, என்ற அடிப்படையில் அதற்கு தேவையான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தபட்டுள்ளது.

இதற்கு விளையாட்டுத் துறை, விளையாட்டுத சங்கங்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் ஒருங்கிணைத்து பணியாற்றுவதால் இது சாத்தியமாகும் என்பதால் விளையாட்டு சங்களின் செயல்பாடுகளை இணையதள வாயிலாக ஒருங்கிணைக்கவும் தேவையான நடைவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல்வரின் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற அடிப்படையில் நேரடியாக சென்று விளையாட்டுத் துறையில் மேற்கொள்ளவேண்டிய கட்டமைப்புகள் வசதிகள் குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளது.

குறிப்பாக பள்ளி பயிலும் காலங்களிலேயே விளையாட்டில் சிறந்து விளங்கிவரும், ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருக்கும் மாணவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கு விளையாட்டு மேம்பாட்டுத் துறை மூலம் தேவையான பயிற்சிகளை வழங்கி சாதனையாளர்களாக திகழச்செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக திறன் ஆய்வு பிரிவு (Talent Research Wing) தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் எவ்வித பரிந்துரையும் இல்லாத வகையில் திறமைக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து சிறந்த வீரர்களை அடையாளம் காணும் வகையில் இக்குழு மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணிக் காப்பது அரசின் கடமை: திமுக

சென்னை, மே.20-

தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணி காத்திட புதிய அரசு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுத்திட வேண்டும் என திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் வீட்டுக்குள் புகுந்த மர்ம கும்பல் ஒன்று அவரை சரமாரியாகத் தாக்கியுள்ளது. படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் உள்ள அவர், சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பத்திரிகைச் சுதந்திரத்தை நசுக்கும் இதுபோன்ற அச்சுறுத்தல்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என தமிழ்நாடு அரசை திமுக சார்பில் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறேன்.

ஊடகங்களை ஜனநாயகத்தின் நான்காவது தூணாக மதிக்க வேண்டும் என்பதுடன், பத்திரிகையாளர்கள் சுதந்திரமாகச் செயல்பட விடாமல், அச்சுறுத்தி அவர்களின் எழுத்துரிமை மற்றும் பாதுகாப்பு கேள்விக்குறியாக்கப்படுவதை திமுக என்றைக்கும் ஏற்றதில்லை.

பத்திரிகையாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் போக்குகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும், அத்தகைய வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் மீது புதிய அரசு சட்டப்படி கடும் நடவடிக்கை எடுத்து அதன் மூலம் தமிழ்நாட்டில் பத்திரிகைச் சுதந்திரத்தை பேணி காத்திடுவது அரசின் கடமை என்பது உணர்ந்து, முத்துப்பேட்டையில் தனியார் தொலைக்காட்சி செய்தியாளர் ஹாஜா முகைதீன் வீட்டுக்குள் புகுந்த மர்ம கும்பல் மீது புதியதாக பொறுப்பேற்றுள்ள மாநில அரசு கடுமையான நடவடிக்கை எடுத்திட வேண்டுமென திமுக சார்பில் கேட்டுக் கொள்கிறேன்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

## அரக்கோணம் செங்கல்பட்டு இரட்டைப் பாதை திட்டத்துக்கு ரயில்வே ஒப்புதல்

### ரூ.993 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட உள்ளது

சென்னை, மே.20-

ரூ.993 கோடி மதிப்பிலான அரக்கோணம் செங்கல்பட்டு இடையிலான இரட்டைப் பாதை திட்டத்திற்கு இந்திய ரயில்வே ஒப்புதல் அளித்துள்ளது.



68 கிலோமீட்டர் நீளமுடைய அரக்கோணம் செங்கல்பட்டு வழித்தடமானது, சென்னை கடற்கரை, தாம்பரம், செங்கல்பட்டு மற்றும் அரக்கோணம் ஆகிய இடங்களை இணைக்கும் சென்னை புறநகர் ரயில்வேயின் முக்கிய வலையமைப்பாகும்.

சென்னை புறநகர் ரயில்வே வலையமைப்பில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதில், அரக்கோணம் செங்கல்பட்டு இரட்டைப் பாதை திட்டம் முக்கியப் பங்கு வகிக்கும் என்று மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார். தாமதமில்லாத ரயில்கள் இயக்கம் மற்றும் ரயில்களின் செயல்பாட்டுத் திறனை இந்த இரட்டைப் பாதை திட்டம் மேம்படுத்தும் என்று அவர் கூறினார்.

இந்த ரயில்வே வழித்தடம் தெற்கு ரயில்வேயால் இயக்கப்படுகிறது. தினசரி புறநகர் பயணிகள் ரயில் மட்டுமின்றி, நீண்ட தூர மற்றும் சரக்கு ரயில்களாலும் அதிகம் பயன்படுத்தப்படும் முக்கிய வழித்தடங்களில் இதுவும் ஒன்றாகும். இத்திட்டம் சரக்கு போக்குவரத்திற்கும் பெரிதும் பயனளிக்கும். இந்த வழித்தடம் சிமெண்ட், உணவு தானியங்கள், இரும்பு மற்றும் வாகனங்கள் போன்ற பொருட்களை, தொழில்துறை மற்றும் துறைமுகப் பகுதிகளுக்கு மிக விரைவாகக் கொண்டு செல்ல பயன்படும்.

இந்த ரயில் பாதை, மஹிந்திரா வேர்ல்ட் சிட்டி, ஸ்ரீபெரும்புதூர், ஒரகடம் மற்றும் இருங்காட்டுக்கோட்டை உள்ளிட்ட பல முக்கியத் தொழில்துறை மண்டலங்கள் வழியாகச் செல்கிறது. எனவே, தொழில்துறை செயல்பாடுகளுக்கு இந்த இரட்டைப் பாதை திட்டம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## “தவெக சார்பில் கூட்டணி பேச வந்தவர்களை உதாசீனப்படுத்தினார் பழனிசாமி” சி.வி.சண்முகம் குற்றச்சாட்டு

சென்னை, மே.20-

அதிமுகவோடு கூட்டணி அமைப்பது தொடர்பாக பேசுவதற்காக தவெக சார்பில் வந்தவர்களை உதாசீனப்படுத்தினார் என்றும், அதிமுக தவெக கூட்டணி அமையக்கூடாது என்பதில் குறியாக இருந்தார் என்றும் எடப்பாடி பழனிசாமி மீது, முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் குற்றம் சாட்டியுள்ளார்.

சென்னையில் முன்னாள் அமைச்சர்கள் எஸ்.பி.வேலுமணி, சி.வி.சண்முகம், சி.விஜயபாஸ்கர் உள்ளிட்ட அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்கள் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது பேசிய சி.வி.சண்முகம், “நடந்து முடிந்த தேர்தலில் பழனிசாமி தலைமையில் அதிமுக படுதோல்வியை சந்தித்துள்ளது. 2019 ஆம் ஆண்டு முதல் தொடர் தோல்வியை அதிமுக சந்தித்து வருகிறது. அதிமுகவின் வாக்கு வங்கியும் தொடர்ந்து சரிவை நோக்கிச் செல்கிறது. இந்த தோல்விக்கான காரணங்களை ஆராய வேண்டும், அதிமுகவை மீண்டும் வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும், இளைஞர்களை இயக்கத்தில் இணைக்க வேண்டும் என நாங்கள் தொடர்ந்து கோரிக்கை வைத்து வந்தோம்.



2024 மக்களவைத் தேர்தல் தோல்விக்குப் பின்னர் நாங்கள் 6 பேர் இதுபற்றி பழனிசாமியை சந்தித்துப் பேசினோம். பிரிந்து சென்றவர்கள், நீக்கப்பட்டவர்களை ஒருங்கிணைத்து ஒன்றுபட்ட அதிமுகவை உருவாக்க வேண்டும் என அவரிடம் சொன்னோம். ஆனால், அவர் அதை ஏற்க மறுத்தார். அப்போதும் தோல்விக்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்படவில்லை.

அதிமுகவை ஒருங்கிணைக்க மறுத்த காரணத்தால், வலிமையான கூட்டணியை அமைக்காத காரணத்தால் தோல்வியடைந்துள்ளோம். அப்போதே நாங்கள் தவெகவுடன் கூட்டணி அமைக்க வேண்டும் என்று சொன்னோம். தவெக சார்பாகவும் கூட்டணி அமைக்க நம்மோடு பேசினார்கள். கூட்டணி பேச வந்தவர்களை உதாசீனப்படுத்தினார். கூட்டணி அமையக்கூடாது என்ற நோக்கத்தில், அவர்களிடம் பேசி வெளியேற்றுவதில் குறியாக இருந்தார். அதேபோல தேமுதிகவையும் அரை பர்சண்ட் கட்சி என சொல்லி கூட்டணியிலிருந்து வெளியேற்றினார். டாக்டர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட யாரையும் அரவணைக்காமல், தான் மட்டும் இருந்தால் போதும் என தேர்தலை சந்தித்தார்.

அதிமுகவை விட்டு சென்ற ஓபிஎஸ், எனக்கு எந்தப் பொறுப்பும் வேண்டாம், அடிப்படை உறுப்பினராக இருக்கிறேன் என்று சொன்னார். அவரையும் சேர்த்துக்கொள்ள மறுத்தார். இப்போது பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில், ‘ தவறு செய்தவர்கள் திருந்திவந்தால் ஏற்றுக் கொள்வோம்’ என சொல்கிறார். கண் கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம் செய்வது போல, தனது பதவிக்கு ஆபத்து வந்தவுடன் இதுபோல பேசுகிறார். முன்னமே இதனை செய்திருந்தால், பழனிசாமி இன்று முதல்வராகியிருப்பார். இதனை கெடுத்து, அதிமுக படுதோல்வியடைய யார் காரணம்? இதையெல்லாம் செய்துவிட்டு அவர் தன்னை நல்லவர் போல காட்டிக் கொள்கிறார்.

நாங்கள் அதிமுகவுக்கு துரோகம் செய்துவிட்டதுபோல இன்று அறிக்கை வெளியிடுகிறார். தனிப்பட்ட முறையில் யாரையும் நாங்கள் விமர்சனம் செய்யமாட்டோம். ஆனால், எங்களையும், எங்கள் குடும்பத்தையும் பற்றி கண்ணியமற்று விமர்சிக்கிறார்கள். பலமான அதிமுகவை மீட்டெடுக்க வேண்டும் என்பதே எங்களின் ஒரே நோக்கம். இன்று பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்கிறார். அதற்காகவே நாங்கள் பொதுக்குழுவை கூட்டி விவாதிப்போம் எனக் கோரிக்கை விடுக்கிறோம். பொதுக்குழுவை கூட்டி இரு தரப்பும் கருத்தை தெரிவிப்போம், பெரும்பான்மை உறுப்பினர்கள் எதனை ஏற்றுக் கொள்கிறார்களோ அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

ஒருபக்கம் பேசித் தீர்க்கலாம் என சொல்லிவிட்டு, மறுபுறம் 31 மாவட்டச் செயலாளர்களை பழனிசாமி நீக்குகிறார். பொதுக்குழுவை கூட்ட கையெழுத்துப் போட்டால் உங்கள் பதவி பறிக்கப்படும் என அச்சுறுத்தல் விடுக்கிறார். இதுபோல மிரட்டப்பட்டால் எப்படி கட்சி வளரும்? கட்சி பொறுப்புகளில் இருந்து பழனிசாமியால் நீக்கப்பட்டது சட்டப்படி செல்லாது. பன்னீர்செல்வம் பழனிசாமி தொடர்பான வழக்கில், ஜெயலலிதா இருந்தபோது பொறுப்புகளில் இருந்தவர்களுக்கே கையெழுத்து போடும் அதிகாரம் என தீர்ப்பு வந்தது.

அதேபோல, அதிமுகவில் எங்களுக்கும், பழனிசாமி தரப்புக்கும் மோதல் ஏற்பட்ட மே 11ஆம் தேதிக்கு முன்பு யாரெல்லாம் பொறுப்பில் இருந்தார்களோ, அவர்களே பதவியில் நீடிப்பார்கள். இதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதிமுக சட்டவிதிகளின் படி 5ல் 1 பங்கு பொதுக்குழு உறுப்பினர்களின் கையெழுத்தை பெற்று பொதுச்செயலாளரிடம் கொடுத்தால், பொதுக்குழுவை 30 நாட்களுக்குள் கூட்டவேண்டும் என உள்ளது. ஆனால் சர்வாதிகாரமாக பழனிசாமி அதனை ஏற்க மறுக்கிறார். மறுபுறம் பொதுக்குழுவை கூட்ட வேண்டாம் என சுற்றறிக்கை விடுகிறார். பொதுக்குழுவை கூட்டி தேர்தல் தோல்வி குறித்து விவாதிக்க வேண்டும். அனைவரையும் ஒருங்கிணைத்து அதிமுகவை வலிமையான இயக்கமாக்க வேண்டும். நாங்கள் பேசத் தயார், ஆனால் பொதுக்குழுவை கூட்டி விவாதம் செய்ய வேண்டும்” என்றார்.

## ரங்கசாமியின் ராஜினாமா ஏற்கப்பட்டு தட்டாஞ்சாவடி தொகுதி காலியானதாக அறிவிப்பு

புதுச்சேரி, மே.20-

முதல்வர் ரங்கசாமி ராஜினாமா ஏற்கப்பட்டதை அடுத்து, தட்டாஞ்சாவடி தொகுதி காலியானதாக சட்டப்பேரவை செயலகம் இன்று அறிவித்துள்ளது.



புதுச்சேரி முதல்வர் ரங்கசாமி சட்டப்பேரவைத் தேர்தலில் தட்டாஞ்சாவடி மற்றும் மங்கலம் தொகுதிகளில் போட்டியிட்டு இரு தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். சட்டப்படி 14 நாட்களில் ஒரு தொகுதியில் ராஜினாமா செய்யவேண்டும் என்பதால், தான் போட்டியிட்டு வென்ற தட்டாஞ்சாவடி தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்து கடந்த 17ல் சட்டப்பேரவை செயலர் தயாளனிடம் ரங்கசாமி கடிதம் தந்தார்.

அக்கடிதத்தை தற்காலிக பேரவைத் தலைவர் அன்பழகன் பரிசீலித்து ராஜினாமாவை ஏற்றார். அதையடுத்து தட்டாஞ்சாவடி தொகுதி காலியானதாக சட்டப் பேரவை செயலகம் இன்று அறிவித்தது.

தொகுதி ராஜினாமா விவரம் தேர்தல் ஆணையத்துக்கு முறைப்படி தெரிவிக்க ப்பட்டது. காலியான இத்தொகுதியில் ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும்.

# அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2026-2027 மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு




தேனி,மே. 20-

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், தேக்கம்பட்டி கிராமத்தில் உள்ள அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2026-2027 ஆம் கல்வியாண்டிற்கு டிப்ளமோ பட்டயப்படிப்பு முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாமாண்டு சேர்க்கை நடைபெற்று வருகிறது. இங்கு பயில விரும்பும் மாணாக்கர்கள் https://www.tnpoly.in என்ற இணையதளம் வாயிலாகவும் அல்லது பயிலக வேலை நாட்களில் கல்லூரிக்கு நேரில் சென்றும் விண்ணப்பிக்கலாம். டிப்ளமோ பிரிவில் சிவில், மெக்கானிக்கல், எலக்ட்ரிக்கல் (ம) எலக்ட்ரானிக்ஸ், எலக்ட்ரானிக்ஸ் (ம) கம்யூனிக்கேசன், கணினி போன்ற இன்ஜினியரிங் பாடபிரிவுகளும், Renewable Energy, Digital Manufacturing Technology, Automation and Robotics and Internet of Things (IoT) என்ற பாடப்பிரிவுகளும் உள்ளன. முதலாம் ஆண்டு சேர்க்கைக்கு 10 ஆம் வகுப்பு (SSLC/Matriculation) தேர்ச்சியும், நேரடி இரண்டாம் ஆண்டு சேர்க்கைக்கு 12 ஆம் வகுப்பு (HSC) அல்லது 10 ஆம் வகுப்பு தேர்ச்சிக்குப் பின்னர் ITI (2 ஆண்டுகள்) தேர்ச்சியும் பெற்றிருக்க வேண்டும். 12 ஆம் வகுப்பில் எந்த பிரிவு எடுத்திருந்தாலும் (வணிகவியல் உட்பட) விண்ணப்பிக்கலாம். Renewable Energy-க்கு முதலாமாண்டில் விண்ணப்பிக்க 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். முதலாமாண்டிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் 30.05.2026 மற்றும் நேரடி இரண்டாமாண்டிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதிநாள் 25.05.2026 ஆகும். மேலும், இச்சேர்க்கை குறித்த கூடுதல் விபரங்கள் தேவைப்படுவோர் கல்லூரிக்கு நேரில் சென்று அல்லது 9791565928 என்ற தொலைப்பேசி எண்ணில் தொடர்புகொண்டு தெரிந்துக்கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத்சிங், தெரிவித்துள்ளார்.

# தேனி மாவட்டம்மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 227 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது




தேனி மே. 20-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 227 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், பொதுமக்க ளிடமிருந்து பெற்றுக் கொண்டார்.இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 227 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அதனைத்தொடர்ந்து, ஆண்டிபட்டி வட்டம்சித்தையன்கவுண்டன்பட்டியை சேர்ந்தச் சேர்ந்த திரு.பாண்டி என்பவர் கடந்த 30.04.2026 அன்று ஏற்பட்ட இடிமின்னல் தாக்கி உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரருக்கு பேரிடர் நிவாரணத்தொகையாக ரூ.4,00,000/ பெறுவதற்கான ஆணையினையும் மற்றும் இவர்களது 2 கறவைமாடுகளும் இடிமின்னல் தாக்கி உயிரிழந்ததைத் தொடர்ந்து, பேரிடர் நிவாரணத்தொகையாக ரூ.75,000/ பெறுவதற்கான ஆணையினையும் ஜானகி என்பவருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட வழங்கல் அலுவலர் நல்லையா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) கதிர்வேல், தனித்துணை ஆட்சியர் கவிதா, உதவி ஆணையர் (கலால்) பஞ்சாபகேசன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




■ நீலகிரி மாவட்டத்தில் கோடை விழா துவங்கியுள்ள நிலையில் குன்னூரில் சிம்ஸ்பூங்காவில்சுற்றுலா பயணிகள் வருகை தந்து பூங்காவினை கண்டு ரசித்துசெல்கின்றனர்.கோடைவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக்காட்சி விரைவில் நடைபெறவுள்ளது





# கிருஷ்ணகிரியில் குடிநீர் மேல்நிலை தொட்டிகளில் எம்.எல்.ஏ. முகுந்த் பாண்டியன் திடீர் ஆய்வு

கிருஷ்ணகிரி, மே 20-

கிருஷ்ணகிரி நகராட்சி பகுதிகளில் அமைந்துள்ள குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை, கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆறு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலும் நேரில் சென்று பார்வையிட்ட அவர், தொட்டிகளின் மேலே ஏறி குடிநீரின் தரம் மற்றும் பராமரிப்பு பணிகள் குறித்து ஆய்வு செய்தார். மேலும், 15 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் தொட்டிகள் முறையாக சுத்தம் செய்யப்படுகிறதா, பொதுமக்களுக்கு சுத்தமான மற்றும் சுகாதாரமான குடிநீர் வழங்கப்படுகிறதா என்பது குறித்து நகராட்சி அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டு அறிந்தார்.

அப்போது, கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் சுகாதாரமான குடிநீர் சேவை தங்கு தடையின்றி தினமும் வழங்கப்பட வேண்டும் என்று அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

தற்போது கோடைக்காலம் நிலவுவதால் பொதுமக்களுக்கு போதுமான அளவில் குடிநீர் வழங்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார். மேலும், குடிநீர் குழாய்களில் உடைப்பு ஏற்பட்டாலோ அல்லது மின் துண்டிப்பு போன்ற காரணங்களால் குடிநீர் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டாலோ அதை உடனடியாக சரிசெய்து, பொதுமக்களுக்கு எந்தவித சிரமமும் இல்லாமல் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது நகராட்சி அதிகாரிகள், ஓவர்சீஸ் பாலமுருகன், குடிநீர் வாரிய பணியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய் பிரபு அலுவலகம் திறப்பு விழா

மாதவரம், மே.20-

தமிழக வெற்றிக் கழகம் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும், திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு சட்டமன்ற அலுவலகம் திறப்பு விழா மாதவரத்தில் நடைபெற்றது. மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு தலைமையேற்று சட்டமன்ற அலுவலகத்தை தவெக கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்களுடன் இணைந்து ரிப்பன் வெட்டி குத்து விளக்கேற்றி வைத்து திறந்து வைத்து, கட்சி நிர்வாகிகள் உறுப்பினர்கள் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கி பொதுமக்களின் பார்வையாளர் குறிப்பேட்டில் நல்லதே நடக்கட்டும், என்றும் தளபதி வழியில் என்று எழுதி கையெழுத்திட்டார். இதில் ஏராளமான தவெக பொறுப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

# புழல் ஒன்றியத்தில் மாதவரம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் எஸ்.சுதர்சனம் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்



மாதவரம், மே.20-

மாதவரம் சட்டமன்ற தொகுதி சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் புழல் ஒன்றியத்திற்கு உட்பட்ட வடகரை, கிராண்ட்லைன், புள்ளிலைன், தீர்த்தக்கிரியம்பட்டு, அழிஞ்சிவாக்கம், விளாங்காடுபாக்கம், சென்றம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் புழல் ஒன்றிய திமுக பொறுப்பாளர் ச.அற்புதராஜ் தலைமையில் திறந்த வேனில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்தவர் களுக்கும் வாக்களிக்காதவர்களுக்கும் நன்றி தெரிவித்தார். அப்போது சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எஸ்.சுதர்சனத்திற்கு புழல் ஒன்றிய முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் பெ.சரவணன், ஒன்றிய நிர்வாகிகள் செல்வமணி, .ரமேஷ், இரா.முருகன் மற்றும் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்கள் அழிஞ்சிவாக்கம்ஆஷா கல்விநாதன், சென்றம்பாக்கம் ராமு மற்றும் ஸ்டாலின், பாஸ்கர், முன்னாள் ஒன்றியக் கவுன்சிலர் சிவகுமார், கார்த்திக், செல்வக்குமார், உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பட்டாசு வெடித்து பொன்னாடை போர்த்தி வரவேற்றனர். இதில் புழல் ஒன்றிய நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் இரு சக்கர வாகனத்தில் ஊர்வலமாகச் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.



■ நீலகிரி மாவட்ட போக்குரவத்து காவல் துறை சார்பாக, கோடை விழாவினை முன்னிட்டு சுற்றுலா பயணிகள் போக்குவரத்து நெரிசல் இன்றி உதகை நகருக்குள் வந்து செல்ல ஏதுவாக நவீன வலைதள சுற்றுலா வழிகாட்டி ( Smart Tourist- QR Code) சேரிங்கிராஸ் பகுதியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிமுகப்படுத்தப்படுத்தினார்

# காரைக்குடியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2026ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு விருப்பமுள்ள மாணவர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்



காரைக்குடி மே,20-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2026 ஆம் ஆண்டு சேர்க்கைக்காக விண்ணப்பங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணைய தளத்தின் வாயிலாகவோ அல்லது காரைக்குடி அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் வந்தோ விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க 03.06.2026 அன்றே கடைசி நாள். இந்நிலையத்தில் ஏற்கனவே உள்ள பொருத்துநர் (Fitter), கடைசலர் (Turner), இயந்திர வேலையாள்(Machinist), கம்பியாள் (Wireman) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், பற்றவைப்பவர்(Welder), கணினி இயக்குபவர் (COPA) போன்ற ஓராண்டு தொழிற்பிரிவுகளுடன் நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்ப புதிதாக தொடங்கப்பட்டுள்ள (Industry 4.0 TATA Technology) தொழில் 4.0 மைய தொழிற்பிரிவுகளான மேம்பட்ட CNC மெஷினிங் டெக்னிஷியன் (Advanced CNC Machining Technician), அடிப்படை வடிவமைப்பாளர் மற்றும் மெய்நிகர் சரிபார்ப்பாளர் (Basic Designer and Virtual Verifier (Mechanical)), மெக்கானிக் எலக்ட்ரிக் வாகனம்(Mechanic Electric Vehicle) போன்ற இரண்டு வருட தொழிற்பிரிவுகளும், தொழில்துறை ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் உற்பத்தி தொழில்நுட்ப வல்லுநர் (Industrial Robotics and Digital Manufacturing Technician) ஓராண்டு தொழிற்பிரிவுகளும் உள்ளன. குறிப்பிட்டுள்ள தொழிற்பிரிவுகளில் Wireman மற்றும் Welder தொழிற்பிரிவை தவிர மற்ற தொழிற்பிரிவில் சேர மாணவர்கள் கட்டாயம் 10 ஆம் வகுப்பு (SSLC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் கம்பியாள் (Wireman) மற்றும் பற்றவைப்பவர் (Welder) தொழிற்பிரிவில் சேர்ந்து கொள்ளலாம்.மேலும், "தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கை உதவி மையமான" காரைக்குடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு மாணவர்கள் நேரில் வந்து விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறாக விண்ணப்பிக்க வருகைபுரியும் பொழுது மாணாக்கர்கள் தங்களது நிரந்தர தொலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, மதிப்பெண் சான்றிதழ் (8மீ/10மீ), சாதி சான்றிதழ், மாற்று சான்றிதழ், முன்னுரிமை சான்றிதழ் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் வங்கி கணக்குப் புத்தக நகல் ஆகியவை உடன் கொண்டுவரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. அதுமட்டுமன்றி, பயிற்சியின் போது அரசுப் பள்ளியில் படித்த அனைத்து பயிற்சியாளர்களுக்கும் அரசால் வழங்கப்படும் உதவித்தொகை மாதம் ரூ.1750/ம் இலவசமாக பாடப்புத்தகங்கள், மிதிவண்டி, சீருடைகள், முடுகாலணிகள், பஸ்பாஸ் ஆகியவை பெற்று வழங்கப்படும். மேலும், பயிற்சியின்போது பிரபல தொழில் நிறுவனங்களில் பயிற்சியும், பயிற்சி காலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் ரூ.25,000/ சம்பளத்தில் வேலை வாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும். எனவே, ITI பயிற்சியில் சேர்ந்து பயனடைவீர்.

மேலும், சேர்க்கை தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு 9499055784, 9499055785 என்ற அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விவரங்கள் பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



■ தாராபுரம் டி எஸ் கார்னர் பகுதியில் இருந்து அண்ணா சிலை வரை கேபிள் பணிக்காக தோன்றிய குழிகள் சரிவர மூடப்படாமல் இருந்த காரணத்தினால் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக குழிகள் ஏற்பட்டு பொதுமக்கள் நடப்பதற்கு சிரமமாக உள்ளது என தமிழக வெற்றிக்கழகத்தின் நகர கழக செயலாளர் அபுத்தாஹீர் அவர்களிடம்பொதுமக்கள் முறையிட்டதை அடுத்து அதை நேரில் சென்று பார்வையிட்டு மேலும் பொதுமக்கள் அக்குழியில் விழாமல் இருக்க தடுப்புகள் அமைத்தனர் அதனை அடுத்து உரிய அதிகாரிகளுக்கு அழைத்து பணிகளை விரைவாக மேற்கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தர வேண்டும் என நேரில் சென்று வேண்டுகோள் விடுத்ததை அடுத்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது உடனடியாக தீர்வு ஏற்பட நடவடிக்கை எடுத்த த வெ க வின் நகரக் கழக செயலாளர் அபுத்தாஹீர் அவர்களுக்கு அப்பகுதி மக்கள் பாராட்டு தெரிவித்தனர்

## தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர் தங்களின் சிறார்களுக்கு கல்லூரி சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்பு

தேனி மே. 20-

தேனி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர் தங்களின் சிறார்களுக்கு 2026-2027 ஆம் கல்வியாண்டில் கல்லூரி சேர்க்கைக்கான சார்ந்தோர் சான்று பெறுவதற்கு விண்ணப் பிக்கலாம். இதற்கான விண்ணப்பங்களை தேனி மாவட்ட முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் அணுகி பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பத்துடன்



முன்னாள் படைவீரரின் படைவிலகல் சான்று அசல், முன்னாள் படைவீரரின் அடையாள அட்டை அசல், முன்னாள் படைவீரர் சிறாரின் 12 ஆம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் நகல் மற்றும் கல்வி மாற்றுச் சான்று நகல், முன்னாள் படைவீரர் சிறாரின் சாதிச்சான்று நகல், முன்னாள் படைவீரர் மற்றும் சிறாரின் ஆதார் அட்டை நகல் ஆகிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், ஏனைய விவரங்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலக தொலைப்பேசி எண். 04546 293 383ஐ தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ் ஜீத் சிங் தெரிவித்துள்ளார்.



■ நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில். 128வது மலர்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு பார்வையிட்டார்.



■ தமிழக வெற்றிக் கழகம் தாராபுரம் சட்டமன்ற தொகுதி அரசு போக்குவரத்து கழகத்தில் தமிழக முதல்வரின் புகைப்படம் இடம்பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது மற்றும் புதிதாக பதவி எற்ற மேலாளர் அவர்களை மாவட்ட செயலாளர் யுவராஜ், மாவட்ட இணைச் செயலாளர் ஷேக் பரீத் தாராபுரம் தெற்கு நகர கழக செயலாளர் அபுத்தாஹீர் தலைமையில் மரியாதை நிமித்தமாக சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது இந்த நிகழ்ச்சியில் கழக நிர்வாகி கௌரி சித்ரா, வடக்கு நகர செயலாளர் மனோஜ்,மாவட்ட இளைஞரணி இணை அமைப்பாளர் ராம்குமார்,மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் அம்மன் பாலு, நகர இணைச் செயலாளர் அசோக்,நகர இளைஞரணி அமைப்பாளர் விமல்குமார் வடக்கு நகர து.செயலாளர் தினகரன், மேகலா, போக்குவரத்துக்கு சங்க நிர்வாகிகள் சிவகுமார். சி விநாயகமூர்த்தி. வி ஆறுச்சாமி. ரி கதிர்வேல். ஞ் அசோக் குமார். ஷி இருளப்பன், மற்றும் வார்டு செயலாளர்கள் உள்ளிட்ட 100 க்கும் மேற்பட்ட த வெ க நிர்வாகிகள் கலந்துகொண்டனர்



## திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு திடீர் ஆய்வு மேற்கொண்ட தவெக எம்எல்ஏ!

திருப்பத்தூர் : மே,20-

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதி எம்எல்ஏ டாக்டர் திருப்பதி திடீரென திருப்பத்தூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு ஆய்வு மேற்கொண்டார். அப்போது மருத்துவ மற்றும் ஊரக நல பணி இயக்குனர் ஞானமீனாட்சி மற்றும் மருத்துவ அலுவலர் சிவகுமார் ஆகியோர் வரவேற்பு அளித்தனர். அப்போது மருத்துவமனையில் உள்ள டாக்டர்களிடம் மருத்துவமனையில் உள்ள பிரிவுகள் மற்றும் எதிர்காலத்தில் ஆக்கபூர்வமான பணிகள் குறித்து கேட்டறிந்தார். அப்போது காரப்பட்டு பகுதியைச் சேர்ந்த மோகனாம்பாள் என்பவர் சர்க்கரை நோய்க்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கால் எடுக்கும் நிலையில் இருப்பதாகவும். அவரை வேறு ஒரு மருத்துவமனைக்கு அனுப்ப டாக்டர்கள் முடிவு செய்ததாக கூறப் படுகிறது. அப்போது மோகனம்பாளின் மகளான தெய்வானை என்பவர் எம்எல்ஏ திருப்பதியை பார்த்தவுடன் மாமா என்னுடைய அம்மாவை காப்பாத்துங்க காலை எடுப்பதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள் மேல் சிகிச்சைக்காக மற்றொரு மருத்துவமனைக்கு அனுப்புவதாக கூறுகிறார்கள் என திடீரென காலில் விழுந்து கதறினார். இதனை அறிந்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் உடனடியாக காலில் விழுந்த மாற்றுத்திறனாளிப் பெண்ணை மேலே தூக்கி விட்டு நான் பார்த்துக் கொள்கிறேன் கவலைப்பட வேண்டாம் என்று கூறினார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திருப்பதி. திருப்பத்தூர் மாவட்டத்திற்கு இந்த ஆண்டு இறுதிக்குள் மருத்துவ கல்லூரி கொண்டு வர நடவடிக்கை எடுக்க எடுப்பேன் என உறுதி அளித்தார்ஞ்

## டாஸ்மாக் பணியாளர்கள் வாழ்வாதாரம் காக்கப்படுமா?717 கடைகள் மூடல் எதிரொலி: மதுரை மாவட்ட டாஸ்மாக் பணியாளர் சங்கம் சார்பில் மாற்றுப் பணி கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு

மதுரை, மே,20-

மதுரை மாவட்ட டாஸ்மாக் பணியாளர் முன்னேற்ற சங்கம் (லிறிதி) சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் அளிக்கப்பட்ட மனுவில், அரசின் கொள்கை முடிவின்படி 717 டாஸ்மாக் மதுபான கடைகள் மூடப்படுவதை வரவேற்பதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.அதேசமயம், கடைகள் மூடப்படுவதால் பணியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது என்பதால், காலியாக உள்ள அரசு துறைகளில் மாற்றுப் பணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.மேலும், மாற்றுப் பணி வழங்கும் வரை வேறு டாஸ்மாக் கடைகளில் தற்காலிக பணியமர்த்தல் செய்ய வேண்டும் என்றும், ஆய்வில் குறைபாடுகள் இல்லாத கடைகளை மீண்டும் திறக்க அனுமதி



வழங்க வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கடை திறப்பு மற்றும் மூடல் நேரங்களில் தளர்வு வழங்க வேண்டும், வணிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் உள்ள சில கடைகளை மூடும் நடவடிக்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளும் மனுவில் இடம்பெற்றுள்ளன. பணியாளர்களின் வாழ்வாதாரம் பாதுகாக்க நடவடிக்கை கோரி மனு

மதுரை மாவட்ட டாஸ்மாக் பணியாளர் முன்னேற்ற சங்கம் (லிறிதி) சார்பில் மாவட்டத் தலைவரும் டாஸ்மார்க் தொமுச மாவட்டச் செயலாளருமான ஜெகநாதன் தலைமையில் மாவட்ட பொருளாளர் தங்கம் மற்றும் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் இணைந்து மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.மேலும், தமிழகத்தில் பூரண மதுவிலக்கை நோக்கி அரசு நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், டாஸ்மாக் பணியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் காலியாக உள்ள அரசு துறைகளில் அவர்களை பணியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

மூடப்பட்ட கடைகளில் பணிபுரிந்த ஊழியர்களை உடனடியாக மாற்றுத் துறைகளில் பணியமர்த்தும் வரை தற்காலிகமாக வேறு டாஸ்மாக் கடைகளில் பணியமர்த்த வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல், தற்போது மூடப்பட்ட அரசு மதுபான கடைகளின் அருகே இயங்கி வரும் தனியார் மனமகிழ் மன்றங்கள் (திலி2, திலி3) தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும், இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வருவாய் துறையினர் ஆய்வு செய்து குறைபாடுகள் எதுவும் இல்லையென அறிக்கை அளித்த கடைகளை மீண்டும் திறக்க அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

கடை திறப்பு மற்றும் மூடல் நேரம் தொடர்பாக காவல்துறையினர் காலை 12 மணி முதல் இரவு 10 மணி வரை மட்டுமே செயல்பட வேண்டும் என தெரிவிப்பதாகவும், ஆனால் விற்பனை கணக்குகள் மற்றும் புள்ளிவிவரங்களை அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு திறப்பதற்கு முன் ஒரு மணி நேரமும், மூடிய பின் ஒரு மணி நேரமும் அவசியம் தேவைப்படுவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மூடப்பட உள்ள சில டாஸ்மாக் கடைகள் வணிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளில் செயல்பட்டு வருவதால், அவற்றை மீளாய்வு செய்து மூடும் நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## கிருஷ்ணகிரியில்மாம்பழ விற்பனை கடைகளில் அதிகாரிகள் ஆய்வு70 கிலோ கெட்டு போன பழங்கள் அழிப்பு

கிருஷ்ணகிரி,மே.20-

கிருஷ்ணகிரியில் மாம்பழ விற்பனை கடைகளில் அதிகாரிகள் ஆய்வு செய்து 70 கிலோ கெட்டுபோன பழங்களை அழித்தனர்.அதிகாரிகள் ஆய்வுகிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் உத்தரவின் பேரில் மாவட்ட உணவு பாதுகாப்பு துறை நியமன அலுவலர் டாக்டர் செந்தில்குமார் தலைமையில் கிருஷ்ணகிரி நகராட்சி மற்றும் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் ஜனகர் ஜோதி நாதன், வேப்பனபள்ளி வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் ராஜசேகர் மற்றும் காவேரிப்பட்டணம்



உணவு பாதுகாப்பு அலுவலர் அஸ்வினி ஆகியோர் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணத்தில் சாலையோர கடைகள், சந்தைகளில் ஆய்வு செய்தனர்.இதில் மாம்பழ விற்பனை மண்டிகள், சில்லறை விற்பனை கடைகளில் திடீர் ஆய்வு நடத்தினார்கள். அப்போது ஒரு சில கடைகளில் 70 கிலோ அளவுக்கு கெட்டுப்போன மாம்பழம் விற்பனைக்கு வைத்திருந்தது கண்டறியப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்பட்டன.மேலும் மாம்பழம் பழுக்க வைக்க கால்சியம் கார்பைடு கல் வைக்கப்பட்டுள்ளதா என ஆய்வுகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து இயற்கையான முறையில் மாம்பழம் பழுக்க வைக்க அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் உரிமம் இல்லாமல் செயல்படும் கடைகள் கண்டறியப்பட்டு நோட்டீஸ் வழங்கப்பட்டன. தொடர்ந்து இயங்கினால் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

## முருக்கம்பள்ளம் திரவுபதி அம்மன் கோயிலில்துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி

கிருஷ்ணகிரி, மே 20-

கிருஷ்ணகிரி மாவட்டம் முருக்கம்பள்ளம் கிராமத்தில் உள்ள திரவுபதி அம்மன் கோயிலில் துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நடந்தது.கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் தாலுகா முருக்கம்பள்ளம் திரவுபதி அம்மன் கோயிலில் 52ம் ஆண்டு மஹாபாரத திருவிழா கடந்த மாதம் 27ம் தேதி கொடி ஏற்றத்துடன் துவங்கியது. அன்று முதல் 18 நாட்கள் மகாபாரத சொற்பொழிவும், கடந்த 1ம் தேதி முதல் 13 நாட்களுக்கு இரவில் தெருக்கூத்து நாடகம் நடந்து வந்தது. இதில், கிருஷ்ணன் பிறப்பு நாடகம், அம்பாள் திருக்கல்யாணம், பாண்டவர் பிறப்பு, அரக்கு மாளிகை பக்காசூரனுக்கு சோறு எடுத்தல், வில் வலைப்பு, திரவுபதி அம்மனுக்கு



திருக்கல்யாணம், சுபத்திரை கல்யாணம், காண்டவன தகனம், சராசந்திரன் சண்டை, துயில், சித்திரசேனன் சண்டை, அரவான் சாபம், அர்சுணன் தபசு மரம் ஏறும் நாடகம் ஆகிய நாடகங்கள் நடந்து வந்தது. இதன் முக்கிய நிகழ்வான துரியோதனன் படுகளம் நிகழ்ச்சி நேற்று காலை நடந்தது. கோயில் முன்பு 30 அடி நீள துரியோதனன் உருவ பொம்மையை மண்ணால் செய்து, அதில் பீமனும், துரியோதனனும் சண்டையிட்டு, இறுதியில் பீமன் தன் கதாயுதத்தால், துரியோதனின் தொடையில் அடித்து வதம் செய்யும் நிகழ்ச்சி நடந்தது. தொடர்ந்து, திரவுபதி அம்மனை துரியோதனன் உடல் மீது வைத்து சபதம் நிறைவேறும் வகையில், திரவுபதி கூந்தல் முடிக்கும் நிகழ்வும் நடந்தது. திருநங்கையின் கையால், ஆண்களும், பெண்களும் துடைப்பத்தால் அடிவாங்கி வேண்டுதலை நிறைவேற்றினர். நிகழ்ச்சியை, முருக்கம்பள்ளம், பாலேப்பள்ளி, எலத்தகிரி, மாதனகுப்பம், வெண்ணம்பள்ளி, ஜோடுகொத்தூர், மேல்அக்ரஹாரம் என 8 கிராம மக்கள், துரியோதனன் படுகளம் நிகழ்ச்சியை கண்டு களித்தனர். விழாவுக்கான ஏற்பாடுகளை, 8 கிராம தர்மகர்த்தாக்கள் செய்திருந்தனர்.

## காவல் நிலையங்களில் எம்.எல்.ஏ. முகுந்த் பாண்டியன் திடீர் ஆய்வு

கிருஷ்ணகிரி, மே 20-

கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்த் பாண்டியன் இன்று காலை கிருஷ்ணகிரி தாலுகா காவல் நிலையம் மற்றும் கிருஷ்ணகிரி டவுன் காவல் நிலையங்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது காவல் நிலையங்களுக்கு மனு அளிக்க வரும் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதி, இருக்கை வசதி உள்ளிட்ட அடிப்படை அம்சங்கள் முறையாக உள்ளனவா என்பதை நேரில் பார்வையிட்டு



ஆய்வு செய்தார். மேலும், பொதுமக்கள் சிரமமின்றி தங்களது குறைகளை தெரிவிக்க ஏதுவான சூழல் காவல் நிலையங்களில் இருக்க வேண்டும் என்றும் அதிகாரிகளிடம் வலியுறுத்தினார்.தொடர்ந்து காவல் நிலையங்களில் தேவையான தளவாடப் பொருட்கள் மற்றும் கூடுதல் காவலர்கள் தேவைப்பட்டால் அவற்றை உடனடியாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி அளித்தார்.மேலும், காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களிடம் காவல்துறையினர் கண்ணியமாகவும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்றும், பொதுமக்களின் மனுக்கள் மற்றும் குறைகளை உடனடியாக பரிசீலித்து விரைந்து தீர்வு வழங்க வேண்டும் என்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.இந்த ஆய்வின் போது காவல் ஆய்வாளர்கள், காவல் உதவி ஆய்வாளர்கள், காவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.




■ கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை மாவட்ட கழக செயலாளர் KPM சதீஷ்குமார் தலைமையில், சென்னை அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காவேரிப்பட்டணம் முன்னாள் ஒன்றிய குழுத் தலைவர் பையூர் ரவி, காவேரிப்பட்டணம் பேரூராட்சி கழக செயலாளர் விமல், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயக்குமார், விவசாய அணி மாவட்ட செயலாளர் மோகன், இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை ஒன்றிய செயலாளர் பெரியசாமி, பொதுக்குழு உறுப்பினர் வாசுதேவன், கலை பிரிவு மாவட்ட செயலாளர் நாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமிக்கு ஆதரவு தெரிவித்தனர்.

## தாம்பரத்தில் தேவாலயம் பெண்கள் விடுதி பேருந்து நிலையம் பகுதியில் உள்ள மூன்று டாஸ்மாக் கடைகளை அகற்ற நடவடிக்கை தாம்பரம் எம்எல்ஏ சரத்குமார் பேட்டி

தாம்பரம் மே,20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் தமிழக வெற்றி கழகம் சார்பில் தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் சரத்குமார் சிட்லபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்

அப்பொழுது அவர் கூறுகையில் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்ற பிறகு இன்று



சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் முறைப்படி திறக்கப்பட்டுள்ளது தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை அளிக்கலாம் பொதுமக்களின் கோரிக்கைகள் மீது உடனடி நடவடிக்கையில் எடுக்கப்படும்

தமிழகம் முழுவதும் முதலமைச்சராக ஜோசப் விஜய் பதவி ஏற்ற பிறகு 717 டாஸ்மாக் மதுபான கடைகள் மூடப்படும் என அறிவித்துள்ளார் அந்த வகையில் தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று தாம்பரம் சானடோரியம் ரயில் நிலையம் அருகே பெண்கள் விடுதி அருகில் இருக்கும் டாஸ்மாக் கடை அதே போல சானடோரியம் ஜிஎஸ்டி சாலையில் நீதிமன்றம் தாலுகா அலுவலகம் மெப்ஸ் பொருளாதார மண்டலத்தில் வேலை பார்க்கும் பெண் ஊழியர்கள் என அனைவரும் பயன்படுத்தும் சர்வீஸ் சாலையில் பெரும் இடையூறாக இருந்த மதுபான கடையும் அகற்றப்பட உள்ளது தாம்பரம் மாநகராட்சி அலுவலகம் அருகே பேருந்து நிலையம் பின்புறம் தேவால

யத்திற்கு எதிரிலேயே பேருந்து நிலைய பயணிகள் பொதுமக்கள் மார்க்கெட்டுக்கு வருபவர்கள் ரயில் நிலையத்துக்கு வருபவர்களுக்கு என பல்வேறு வகையில் பொதுமக்களுக்கு இடையூராக இருந்த டாஸ்மாக் கடையும் அகற்றப்பட உள்ளது முதல் கட்டமாக தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் இந்த மூன்று டாஸ்மாக் கடைகளும் அகற்றப்பட உள்ளது பொதுமக்களின் கோரிக்கைக்கு ஏற்ப அடுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றார்



■ திருப்பூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாநகர காவல் துணை ஆணையர் ராஜராஜன் உள்ளார்.



# சிவகங்கை மாவட்டம்மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது

சிவகங்கை,மே,20-

சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தலைமையில் நடைபெற்றது.மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், இலவச வீட்டுமனைப் பட்டா, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, மாவட்ட ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வுத்துறை உதவித்தொகை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள், புதிய மின்னணு குடும்ப அட்டை போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, பொதுமக்களிடமிருந்து 250 மனுக்கள் பெறப்பட்டது. அம்மனுக்களில் தகுதியுடைய மனுக்கள் மீது தனி கவனம் செலுத்தி, விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், உட்பட அரசின் பல்வேறு துறைகளை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மானாமதுரை புதிய பேருந்து நிலையத்தில் விதிமீறி நிறுத்தப்படும் வாகனங்கள்: ஆணையர் உத்தரவு நடைமுறையில் கேள்விக்குறி

மானாமதுரை மே,20-

மானாமதுரை நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலைய வளாகத்திற்குள் இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களை நிறுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தாலும், அந்த உத்தரவை மீறி நூற்றுக்கணக்கான வாகனங்கள் வளாகத்திற்குள் நிறுத்தப்பட்டு வருகின்றன.




நகராட்சி ஆணையர் பெயரில் வைக்கப்பட்டுள்ள அறிவிப்புப் பலகையில், "வாகனங்களை நிறுத்தத் தடை செய்யப்பட்டுள்ளது; மீறும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டு காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்" என எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், பேருந்து நிலைய தூண்கள் அருகில், கடைகள் முன்பு மற்றும் கழிப்பறை வளாகத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாகனங்கள் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ளதால், பேருந்துகள் இயக்கம் மற்றும் பயணிகள் நடமாட்டத்திற்கு இடையூறு ஏற்படுவதாக கூறப்படுகிறது.மேலும், நடைபாதைகள் மற்றும் பயணிகள் அமரும் இடங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றம்சாட்டுகின்றனர். எழுத்துப்பூர்வ எச்சரிக்கை மட்டும் வழங்கப்பட்டு, களத்தில் எந்தவித அமலாக்க நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.எனவே, விதிமீறலில் ஈடுபடும் வாகன ஓட்டிகள் மீது நகராட்சி நிர்வாகமும் காவல்துறையும் உடனடி நடவடிக்கை எடுத்து, பேருந்து நிலைய வளாகத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மானாமதுரை அரசு மருத்துவமனையில் எம்.எல்.ஏ இளங்கோ திடீர் ஆய்வு

மானாமதுரை மே,20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அரசு மருத்துவமனையில் சட்டமன்ற உறுப்பினர் இளங்கோ திடீர் ஆய்வு மேற்கொண்டார். மருத்துவமனையின் உள்கட்டமைப்பு வசதிகள், நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் மற்றும் நிர்வாக செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.அப்போது முதலாவது வார்டில் உள்ள கதவுகளின் தாழ்ப்பாள்கள் உடைந்த நிலையில் இருப்பதை கண்டறிந்த அவர், பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அனைத்து கதவுகளும் போர்க்கால அடிப்படையில் விரைவாக சீரமைக்கப்படும் என உறுதியளித்தார்.இந்த ஆய்வின்போது நகர் செயலாளர் நம்பிராஜன், மேற்கு ஒன்றிய செயலாளர்கள் சரண் ராஜ், கண்ணன் மற்றும் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



■ மானாமதுரை நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் அலங்கார வளைவு அமைக்கும் பணிக்காக பள்ளம் தோண்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக மதுரை ரு ராமேஸ்வரம் வழியாக செல்லும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள் பேருந்து நிலையத்திற்குள் செல்லாமல், நான்கு வழிச்சாலையிலேயே நிறுத்தப்பட்டு பயணிகளை இறக்கி விட்டு செல்கின்றன. இதனால் பொதுமக்கள் மற்றும் பயணிகள் சாலையை கடக்க சிரமம் அடைந்தனர்.



■ இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027 நடைபெறுவதை முன்னிட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு குறித்துதொடர்புடைய அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப., தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வன அலுவலர் ரேவ்தி ரமன் இ.வ.ப., , மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.



# அயன் தென்கரை கண்மாயில் நெல் அறுவடை தீவிரம்

## அரசு கொள்முதல் நிலையம் அமைக்க விவசாயிகள் கோரிக்கை

மதுரை, மே,20-

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தென்கரை ஊராட்சிக்கு உட்பட்ட ஊத்துக்குழி ஐந்து வாசல் அய்யனார் விவசாயிகள் நலச்சங்கம் சார்பில் தலைவர் முத்துப்பாண்டி, செயலாளர் ராஜசேகர், பொருளாளர் முத்துக்குமார் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது. மனுவில் அயன் தென்கரை கண்மாய் பாசனத்தில் சுமார் 300 ஹெக்டேர் பரப்பளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டு தற்போது அறுவடை பணிகள் நடைபெற்று வருவதாக தெரிவித்துள்ளனர். ஆனால், விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்ய அரசு நெல் கொள்முதல் நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை என்றும் கூறியுள்ளனர்.

எனவே, விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உடனடியாக அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அனுமதி வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி பகுதியில், தேசிய நெடுஞ்சாலை சேலம் கோட்டம் சார்பாக, சூளகிரி உத்தனப்பள்ளி சாலை வரை ரூ.15.27 கோடி மதிப்பீட்டில் நடைப்பெற்று வரும் சாலைப் பணிகளை திருச்சி நெடுஞ்சாலை க (ம) ப வட்டத்தின் கண்காணிப்புப் பொறியாளர் இளம்வழுதி தலைமையிலான உள்தணிக்கை குழுவினர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், இந்தியன் வங்கி மூலம் செயல்பட்டு வரும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தால் (RSETI) நான்கு சக்கர வாகன ஓட்டுநர் உரிமம் மற்றும் வீட்டு மின் உபயோக பழுது பார்த்தல் மற்றும் மின் இணைப்பு பயிற்சிகள் 30 நாட்களுக்கு வழங்கப்பட்ட 70 பயனாளிகளுக்கு சான்றிதழ் மற்றும் 32 பயனாளிகளுக்கு ரூ.62,000/ மதிப்பிலான பயிற்சி உபகரணங்களை மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் (18.05.2026) அன்று வழங்கினார்.

# பழனி அருகே தோட்டத்தில் சூதாடிய 7 பேர் அதிரடி கைது

## 3 மோட்டார் சைக்கிள்கள், ரொக்கப் பணம் பறிமுதல்!

*திண்டுக்கல், மே.20–*

*திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் பகுதிகளில் சட்டவிரோத செயல்களைத் தடுக்கும் பொருட்டு போலீசார் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்நிலையில், வரட்டாறு பாலம் அருகேயுள்ள தோட்டம் ஒன்றில் பெரிய அளவில் பணப் பந்தயத்துடன் சீட்டாட்டம் நடப்பதாக போலீசாருக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து, இன்ஸ்பெக்டர் பாஸ்கரன், சார்பு ஆய்வாளர் ரவிச்சந்திரன் ஆகியோர் தலைமையில், சிறப்பு சார்பு ஆய்வாளர் சிவகுமார் மற்றும் காவலர் குணசேகரன் ஆகியோர் அடங்கிய தனிப்படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அதிரடி சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, தோட்டத்தில் மறைவான ஒரு பகுதியில் பணம் வைத்து தீவிரமாக சூதாடிக்கொண்டிருந்த கும்பலை போலீசார் வளைத்துப் பிடித்தனர். விசாரணையில் அவர்கள் செந்தில்குமார், நாகராஜ், ஆனந்தராஜ், குமார், முத்துராமன், பாண்டி மற்றும் ஆறுமுகம் ஆகிய 7 நபர்கள் என்பது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் 7 பேரையும் போலீசார் அதிரடியாக*



*கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து சூதாட்டத்திற்கு பயன்படுத்தப்பட்ட ரொக்கப் பணம் மற்றும் அவர்கள் சம்பவ இடத்திற்கு வருவதற்குப் பயன்படுத்திய 3 இருசக்கர வாகனங்களை (மோட்டார் சைக்கிள்கள்) காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.*

*கைது செய்யப்பட்ட 7 நபர்களும் பழனி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். நீதிபதியின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின், அவர்கள் அனைவரும் நீதிமன்றக் காவலில் பலத்த பாதுகாப்புடன் சிறையில் அடைக்கப்பட்டனர். இச்சம்பவம் பழனி மற்றும் பாலசமுத்திரம் சுற்றுவட்டாரப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.*



■ கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) அபிநயா ஆகியோர் உள்ளனர்.



# தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்ட செயற்குழு கூட்டம்

சிவகங்கை,மே,20-

தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சிவகங்கை மாவட்ட செயற்குழு கூட்டம் சிவகங்கை RRRK நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கிய மாவட்டத் தலைவர் ஆரோக்கியசாமி தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு குறித்த கருத்துகள், அடுத்த மூன்று மாத காலத்திற்கு முன்னெடுக்க உள்ள செயல்பாடுகள் ஆகியவற்றை எடுத்துரைத்தார். மே முதல் வாரம் புதுக்கோட்டை புஷ்கரம் வேளாண் கல்லூரியில் நடைபெற்ற மாநில செயற்குழுவில் விவாதிக்கப்பட்ட விஷயங்களையும், கடந்த நான்கு மாதங்களில் கிளைகள் மற்றும் மாவட்டம் சார்பாக முன்னெடுக்கப்பட்ட செயல்பாடுகளைப் பற்றியும், உப குழுக்களின் பணிகளைப் பற்றியும் மாவட்ட செயலாளர் பிரபு விளக்கிக் கூறினார். அதனைத் தொடர்ந்து மாவட்டப் பொருளாளர் சாஸ்தா சுந்தரம் உறுப்பினர் சேர்க்கை குறித்த விவரங்களைத் தெரிவித்ததோடு, இக்காலகட்டத்திற்கான நிதிநிலை அறிக்கையை சமர்ப்பித்தார். செயற்குழு உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன்முருகானந்தம் இளையராஜா விக்டர் ஆரோக்கிய மேரி இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். தேசியக் குழந்தைகள் அறிவியல் மாநாடு ஒருங்கிணைப்பு குழு அமைப்பது, உப குழுக்களின் பொறுப்பாளர்கள் நியமனம், மே 31 அன்று உலகப் புகையிலை எதிர்ப்பு தினம் அனுசரிப்பது, ஜூன் 5 உலக சுற்றுச்சூழல் தினம் கொண்டாடுவது, கல்லூரிகளில் அறிவியல் இயக்க கிளைகள் ஆரம்பிப்பது உள்ளிட்ட தீர்மானங்கள் முன்மொழியப்பட்டன. சிவகங் கை கிளைத் தலைவர் ராஜு சரவணன் நன்றியுரை தெரிவித்தார்.

**உயர்திரு வருவாய் கோட்டாசியர் அவர்கள், திண்டுக்கல்**

திருமதி சினேகா
த/பெ. குபேந்திரன்
பழைய போலீஸ் ஸ்டேஷன் தெரு,
விளாம்பட்டி நிலக்கோட்டை தாலுகா
திண்டுக்கல் மாவட்டம்.

...மனுதாரர்

எதிர்

1. வருவாய் கோட்டாசியர் அவர்கள் திண்டுக்கல்.
2. வருவாய் வட்டாட்சியர் நிலக்கோட்டை.

...எதிர் மனுதாரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் பாட்டி அ.ஒச்சாயிஅம்மாள் க/பெ அய்யர் தேவர் அவர்கள் கடந்த 29.04.1995 அன்று பள்ளிவாசல் தெரு விளாம்பட்டி நிலக்கோட்டை தாலுகா திண்டுக்கல் மாவட்டம் 624219 என்ற விலாசத்தில் இயற்கை மரணம் அடைந்ததற்கான இறப்பு சான்றிதழ் கோரி விண்ணப்பித்துள்ளார். இது குறித்து யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின், இவ்வறிவிப்பு கண்ட 7 நாட்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் சமூகத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளலாம். தவறும் பட்சத்தில் மேற்படி மனுதாரர் கோரியபடி மனு உத்தரவாகும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**வருவாய் கோட்டாசியர் திண்டுக்கல் மாவட்டம்.**

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161